அலை கடலில்
ஒரு ராகம்
அபர்ணாலயாவின்
**புது வசந்தம்**
இடம்:
கைலாசபதி
கலை அரங்கம்
காலம்: 16 - 10 - 94
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
மாலை 4 மணி

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

தென்றலில் தவழ்ந்து வரும்
அபர்ணாலயாவின்
**புது வசந்தம்**
இடம்;
கைலாசபதி
கலை அரங்கம்
காலம்: 16 - 10 - 94
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
மாலை 4 மணி

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 27 வியாழக்கிழமை (13 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 323

இன்று ஆரம்பமாகும் பூர்வாங்கச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் தரப்பில் பங்குபற்றும் பிரதிநிதிகள் இவர்கள்:
யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கே. கரிகாலன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. சு. டொமினிக், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ஆ. ரவி.
(ஒ)



# இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில்
# அரசு-புலிகள் ஆறு சுற்றுப் பேச்சுக்கள்

## பேச்சு பற்றிய செய்திக்கு முக்கிய இடம்

கொழும்பு, ஒக். 13
விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும், அரசப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று ஆரம்பமாகவிருக்கும் பூர்வாங்கப் பேச்சுக்கள் குறித்த செய்திகள் சர்வதேச செய்தி நிறுவனங்களில் முக்கிய இடத்தை நேற்று பிடித்திருந்தன.
பி.பி.ஸி., வோய்ஸ் ஒவ் அமெரிக்கா, ஆஸ்திரேலிய வானொலி, சிங்கப்பூர் வானொலி, தூரதர்ஷன், ஆகாஷவாணி ஆகியவற்றில் பேச்சுபற்றிய செய்திகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது.
[உ-3]

## விஜயதசமியில் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக். 13
அரசு — விடுதலைப் புலிகள் இடையேயான பூர்வாங்கப் பேச்சு மகா நவமியான இன்று ஆரம்பமாகி விஜயதசமியான நாளை வரை தொடரும் என்பது குறிப்பிடத்தக்கது.
[உ]

## இரத்மலானையில் இருந்து இன்று காலை புறப்படுவர்

கொழும்பு, ஒக். 13
அரச பிரதிநிதிகள் இன்று காலை 7 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து விசேட விமானமூலம் புறப்பட்டு பலாலியை வந்தடைவர். அங்கிருந்து அவர்கள் தனியார் ஹெலிக்கொப்டரில் யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னால் உள்ள திறந்தவெளியில் காலை 9 மணியளவில் வந்திறங்குவர்.
அரச பிரதிநிதிகளுடன் இந்த ஹெலிக்கொப்டரில் பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆனி உட்பட மற்றும் சில செய்தியாளர்களும் வருகின்றனர்.
(ஒ-எ-3)

## புலிகளின் விசேட படையணி பிரதிநிதிகளுக்கு பதுகாப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
இன்று யாழ்ப்பாணம் வரும் அரச சார்பு பிரதிநிதிகளுக்கு விடுதலைப் புலிகளின் விசேட படையணி பாதுகாப்பு அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.
அரச பிரதிநிதிகள் ஹெலி மூலம் வந்திறங்கும் பல்கலைக்கழகப் பகுதியிலும், பேச்சுவார்த்தை நடைபெறும் பகுதியிலும், பிரதிநிதிகள் தங்கியிருக்கும் ஹோட்டல் பகுதியிலும் சில பாதைகள் பொதுமக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(உ-3)

## உடனுக்குடன் கொழும்புக்கு தொடர்பு கொள்ள வசதி

யாழ்ப்பாணம், ஒக். 13
அரச தரப்புப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுக்களின் விவரங்களை உடனுக்குடன கொழும்பில் உள்ள தமது உயர்மட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தவும் —
பேச்சுக்கள் தொடர்பாக அங்கிருந்து பதில் மற்றும் மேலதிக தகவல்களை பெறவும் —
விசேட ஏற்பாடுகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அரச பிரதிநிதிகள் குழு தெரிவிக்கும் விடயங்களை தமது கொழும்பு அலுவலகம் மூலம் உயர் மட்டத்துக்கு தெரியப்படுத்தி, பதிலை பெற்றுக்கொடுக்க செஞ்சிலுவையினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.
அரச குழு பிரதிநிதிகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தில் இருந்து தமது பணியை மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (உ-3)

## அரச பிரதிநிதிகள் குழு அங்கத்தவர்கள் விவரம்

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்காக இன்று யாழ்ப்பாணம் வரும் அரச குழுப் பிரதிநிதிகள் பற்றிய சில விவரங்கள் வருமாறு:

**பாலபத்தபெண்டி**
பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவின் அந்தரங்கச் செயலாளரான இவர் குழுவின் தலைவராவார். சட்டத்தரணியான இவர் பண்டாரநாயக்கா குடும்பத்தின் சட்ட ஆலோசகரும் கூட. சந்திரிகாவின் நம்பிக்கைக்கு உரியவர்.

**லயனல் பெர்னாண்டோ**
யாழ்ப்பாணம் அரச அதிபராகப் பணியாற்றி மக்களின் பாராட்டுக்களை பெற்றுக்கொண்ட இவர் வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுநராகவும் பணியாற்றியவர். முன்னர் திருகோணமலை அரச அதிபராகவும் பணிபுரிந்தவர்.
புதிய அரசு பதவி ஏற்ற பின்னர் இவர் தகவல், சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சு செயலாளராகவும் பதவி ஏற்றார்.

**என். ராஜன் ஆசிர்வாதம்**
யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைச் சேர்ந்த இவர் கொழும்பு போர்ட் றோட்ஸ் தோர்ன்டொன் கணக்காளர் கம்பனியின்
(6ஆம் பக்கம் பார்க்க)

## அரச குழு நாளை திரும்பும்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 13
ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகளாக வரும் நால்வர் குழுவினர் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்துவர். நாளை மாலை அவர்கள் உடன் கொழும்பு திரும்புவர்.

யாழ். பல்கலைக் கழகம் முன்பாகவுள்ள திறந்த வெளியில் வந்திறங்கும் அரசுப் பிரதிநிதிகள் நால்வரையும் விடுதலைப் புலிகள் வரவேற்று யாழ்ப்பாணம் சுபாஷ் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்வர்.
அங்கு சிறிது நேரம் அவர்கள் ஓய்வெடுத்த பின்னர் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்கு இருதரப்புப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும்.
(6 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை விடயத்தில் இந்திய அரசு தலையிடாது!

## இணை அமைச்சர் குர்ஷித் பேட்டி

புதுடில்லி, ஒக் 13
இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சியில் இந்திய அரசு தலையிடாது.
இந்திய வெளியுறவு இணையமைச்சர் சல்மான் குர்ஷித் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் சொன்னதாவது:-
இலங்கையில் சமாதானம் ஏற்படாது இருப்பது இந்தியாவுக்கு சாதகமானதாக இருக்காது
இலங்கையில் சமாதானம் இல்லாததினால் தான் இந்தியா தனது சிறந்த இளம் அரசியல்வாதியான ராஜீவ் காந்தியை இழக்க நேரிட்டது.
இலங்கையின் புதிய அரசு
[6 ஆம் பக்கம் பார்க்க]

**1988 முதல் மாதம் 260 ரூபா வீதம் கொடுப்பனவு**

# ஓய்வூதியரின் பெருந்தொகை நிலுவை வழங்குவது பற்றி அரசு ஆலோசனை

கொழும்பு, ஒக். 13
1988 ஆம் ஆண்டில் இருந்து மாதம் 260 ரூபா வீதம் வழங்கப்படவேண்டிய ஓய்வூதிய நிலுவையை எப்படி அரச ஓய்வூதியக்காரர்களுக்கு வழங்குவது என்பது குறித்து ஓய்வூதியத் திணைக்களமும் பொதுநிர்வாக அமைச்சும் ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
ஓய்வூதியத் திணைக்களத்தின் உயர்நிலை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ''சண்டே லீடர்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.
இது தொடர்பான அறிக்கைகளை திறைசேரிக்கு அனுப்பும்படி கோரப்பட்டிருந்தும் ஓய்வூதியத் திணைக்களம் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை அனுப்பிவைக்கவில்லை என்று திறைசேரி
(6 ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் புலிகள் அதிரடி! 7 படையினர் உயிரிழப்பு!!

கொழும்பு, ஒக். 13
மணலாறு (வெலிஓயா) பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.
டிராக்டர் ஒன்றில் சென்று கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியபோதே இந்த ஏழு பேரும் உயிரிழக்க நேரிட்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.
பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு ஒரு நாள் இருக்கக் கூடியதாக இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.
(ஒ-எ)

## புலிகளுக்கு நல்வாழ்த்து பிரதமர் அனுப்புகிறார்

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவின் நல்வாழ்த்துக்களை விடுதலைப் புலிகளுக்கு எடுத்துச் செல்கிறோம்.
— இவ்வாறு அரச பிரதிநிதிகள் குழுவில் ஒருவராகப் பேச்சு நடத்துவதற்கு யாழ்ப்பாணம் வருகை தரும் லயனல் பெர்னாண்டோ நேற்று மாலை கொழும்பில் தெரிவித்தார்.
பிரதமர் சந்திரிகாவிடமிருந்து விடுதலைப் புலிகளுக்கு விசேட செய்தி எதையும் கொண்டு செல்கிறீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.
[உ-எ]

## பிரார்த்தனையில் ஈடுபட மத தாபனங்கள் வேண்டுதல்

கொழும்பு, ஒக். 13
இன்றும், நாளையும் பிரார்த்தனையில் ஈடுபடும்படி தேசிய கிறிஸ்தவ சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.
சமாதானப் பேச்சுகள் வெற்றிபாக முடியவேண்டும் என்று கோரியே இப் பிரார்த்தனையை செய்யும்படி மக்களை தேசிய கிறிஸ்தவ சபை கோரியுள்ளது.
இதேபோன்ற கோரிக்கைகளை தெற்கில் உள்ள இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதகுருமார்களும், மத அமைப்புகளும் வெளியிட்டிருப்பதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.
(உ-எ)

## 24 செய்தியாளர்கள் நேற்று பலாலி வருகை

யாழ்ப்பாணம், ஒக். 13
ஸ்ரீலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவிருக்கும் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் தொடர்பான செய்திகளை சேகரிக்க 24 செய்தியாளர்கள் கொண்டகுழு ஒன்று நேற்று பலாலிக்கு வந்து சேர்ந்தது.
இன்று காலை காங்கேசன்துறையில் இருந்து 'கோமாரி' கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு வந்து சேரும் இக்குழுவினர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ். சுபாஸ் ஹோட்டலில் தங்கியிருப்பர்
இக்குழுவில் ஒரு பகுதியினர் இன்று மாலையே கொழும்பு திரும்புவர் என்றும் —
மற்றைய பகுதியினர் நாளை மாலை கொழும்பு திரும்புவர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.
இக் குழுவினருக்குத் தேவையான தகவல்களை வழங்கும் வேலைகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.
(உ-37)

## நிகழ்ச்சி நிரல் இன்றியே பேச்சுத் தொடங்கும்

### லயனல் பெர்னாண்டோ தகவல்

கொழும்பு, ஒக். 13
விடுதலைப் புலிகளுக்கும், அரசுக் குழுவுக்கும் இடையேயான முதற்கட்டப் பேச்சுக்களுக்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் எதுவும் இடையாது.
தகவல்துறை அமைச்சுச் செயலாளரும் அரசுக் குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகளில் ஒருவருமான திரு. லயனல் பெர்னாண்டோ இத்தகவலை நேற்று வெகம்பயாவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.
யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து இதுவரை எண்ணப்படவில்லை என்றும் அவர் கூறினார்.
எனினும்—
இரண்டு நாள் பேச்சுக்களின் போது—
அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவருதல், விநியோகம், மின்சார விநியோகம், வீதிகளைத் திருத்துதல், ஆஸ்பத்திரி மற்றும் பாடசாலைக் கட்டடங்களைத் திருத்தல் போன்ற விடயங்களும் —
போர் நிறுத்தத்துக்கான வழிவகைகளை ஆராய்தல், கடல்வலயத் தடை நீக்கம், அகதிகள் விவகாரம் என்பனவும்— பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது
[அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங் கலைஞர் மன்ற

மாதாந்த

இசை நிகழ்ச்சியும்

# வாணி விழாவும்

ஆதரவு: இந்திரா நகையகம்,
181, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இடம்: மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: **14 - 10 - 1994** வெள்ளி
மாலை 3மணி

## நிகழ்ச்சி நிரல்

மாலை 3-00 — 4-30 விஜயதசமி பூஜையும், வித்தியாரம்பமும்

4-30 — 4-50 பாட்டு:
எஸ். லதா, எம். விஜிதா, எஸ். சறோஜினி, பி. சாந்தினி, எஸ். கங்காநந்தி, எஸ். அஜிதா, பி. ரங்கநாதன்.
ப. உஷா — வயலின்
எம். கஜன் — மிருதங்கம்

4-50 — 5-15 மிருதங்க இசை:
எஸ். சிவசிவா, ஜெ. சங்கர், சி. அகிலன், ஸ்ரீ. சுதர்சன், கே. மயூரன்

5-15 — 5-40 கூட்டுவாத்திய இசை:
திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமாரனின் மாணவிகள்

5-40 — 7-40 இசைக்கச்சேரி:
எஸ். பத்மலிங்கம் — பாட்டு
ஆர். இராதாகிருஷ்ணன் — வயலின்
எ. சந்தானகிருஷ்ணன் — மிருதங்கம்
எம். சிதம்பரநாதன் — கெஞ்சிரா

7-40 — 8-10 மங்கள விளக்கேற்றல்:
திரு. வ. இராசையா அவர்கள் (வர்த்தகர்)
திரு. கே. எஸ். விபுலானந்தன். அவர்கள் (வர்த்தகர், இந்திரா நகையகம்)

தலைமையுரை:
திரு. ச. ஸ்ரீரங்கநாதன் அவர்கள் (விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர், வேலணை-கல்விக்கோட்டம்)

பிரதம விருந்தினர் உரை:
தமிழ்த்தேன் செம்மொழிச் செல்வன், சிவ. மகாலிங்கம், B. A. அவர்கள் (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

8-10 — 9-40 "பட்டிமன்றம்"
(பாடலில் பட்டிமன்றம்)
எவர்பாடலில் தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்கிறது.

நடுவர்: பொன். கணேசமூர்த்தி அவர்கள்

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
கனக. நாகேஸ்வரன், எம். ஏ.
செ. சத்தியமூர்த்தி, பி. எஸ். ஸி., ஜே. பி.
பொன். மதிமுகராஜா, ஜே. பி.
பசு. ஸ்ரீபதி, நாடக ஆசிரியர்

கவிஞர் கண்ணதாசன்
எம். எஸ். தயாளன், பி. ஏ.
எஸ். கணேசலிங்கம், பி. ஏ
க. கணேசலிங்கம், அதிபர்
எஸ். வாமன், விஞ்ஞான ஆசிரியர்

பட்டிமன்ற அமைப்பு: பொன். மதிமுகராஜா
எம். ஜி. ஆர். இல்லம்,
தாவடி.

கலா ரஸிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

— மேற்படி மன்றத்தினர்.

[சி–9318]



பொது மக்களுக்கு

## ஓர் வேண்டுகோள்

சங்கானை, வெல்வில்

சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

பரம்பரை தர்மகர்த்தாக்களினால் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருவதை ஊர்மக்கள் யாவரும் அறிவீர்கள். எமது ஆலயத்தில், சபையோ, சங்கமோ கிடையாது. எமது ஆலயப் பெயரை பாவித்து யாரும் பணமோ, பொருளோ, சேர்த்தால் இதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை பொதுமக்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தர்மகர்த்தாக்கள்:
க. பொ. செல்வநாயகம்,
அ. க. சண்முகநாதன்.

[33311]



## தோட்ட வேலையாள் தேவை

தோட்ட வேலைகளில் போதிய அனுபவமுடைய ஒருவருக்கு உடனடியாகத் தொழில் வாய்ப்புண்டு. யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

★ இன்றும், நாளையும் காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



தமிழீழ நீதிமன்றுக்களுக்கான முறைநிறைவேற்றுநர் (பிஸ்கால்)

## பணிநிலைக்கான வெற்றிடம்

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் கீழ் இயங்கும் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய தமிழீழ மாவட்ட நீதிமன்றங்களுக்கு மேற்படி பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை — க. பொ. த. (சா. த) சித்தி
வயதெல்லை — 18 — 30 வரை

விண்ணப்பங்கள் செய்ய விரும்புபவர்கள் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை கீழ்க் குறிப்பிடும் முகவரிக்கு **29 — 10 — 1994** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பொறுப்பாளர்,
நடுவப்பணியகம்,
தமிழீழ நீதி நிர்வாகத்துறை,
தமிழீழம்.

(சி–9322)



## பியோன்கள் தேவை

அலுவலக உதவியாளர் (பியோன்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முன் அனுபவம் உடையவர்களுக்கும், யாழ். மாநகரப் பகுதி எல்லைக்குள் வசிப்போருக்கும் முன்னுரிமை தரப்படும்.

கல்வித் தகைமை, குடும்ப விவரங்களுடன் **14-10-1994** வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்.
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## நீங்காதநினைவலைகளின்

5 ஆம் ஆண்டு



மலர்வு: 25 — 12 — 1919

உதிர்வு: 07 — 10 — 1989

வேலணையூர்

### அமரர் வைரமுத்து குமாரசாமி

அவர்கள்

(ஓய்வு பெற்ற தபால் வேலையாளர்)


சொந்தங்கள் கூடியிருக்க – தாங்கள்
சுகங்கள் பல தந்திருக்க – தங்கள்
பிரிவு தானாமல் சோகமே – உருவாகி
தங்களுக்கு சுந்தர தமிழினிலே - கவிதை
வடிக்கின்றோம் – ஐயா!

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிங்கம் லேன், சிங்கம் வீடு,
உடுவில்.

[7959]

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 08 — 1917

மறைவு: 08 — 10 — 1989

அமரர்

### இராமலிங்கம் தம்பிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர் புங்குடுதீவு!)

திதி: **13-10-1994**

மணம் பரப்பும் பாசமலராக எமக்காக எந்நாளும் வாழ்ந்தபாச விளக்கே! எங்கள் அப்பாவே! வாழ்ந்தது போதுமென்று இறைவனழைத்தானோ இல்லை அணைத்தானோ.

எமக்காக வாழ்ந்த உங்களை நினைந்து கலங்குகின்றோம். கண்ணீர் சிந்துகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் [illegible]
கொக்குவில்.

(33314)

# கொழும்பு மேயர் கணேசலிங்கத்துக்கு எதிராக ஐ. தே. கவினர் போர்க்கொடி!

## பொது மக்கள் ஐக்கிய முன்னணி பக்கம் சாய்கிறார்

கொழும்பு, ஒக் 13

கொழும்பு மாநகர பதில் மேயரும் ஐ.தே.க. பொருளாளருமான கே. கணேசலிங்கத்துக்கு எதிராக கொழும்பு மாநகரசபையில் அங்கம் வகிக்கும் 19 ஐ.தே.க. உறுப்பினர்களும் போர்க்கொடி உயர்த்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு சார்பாக கணேசலிங்கம் நடந்து கொள்வதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மாநகரசபையின் ஐ.தே.க உறுப்பினர்கள் 19 பேரும் கடந்த வாரம் மூடிய அறையில் ஒன்று கூடி கணேசலிங்கத்தின் போக்குக் குறித்து ஆராய்ந்தனர். இந்தச் சந்திப்பின் போது ஐ.தே. கவின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பதில் மேயரின் நடவடிக்கைகளை தாங்கள் கடுமையாக ஆட்சேபிப்பதாக சிற்றமுற்றிருக்கும் கொழும்பு மாநகரசபையின் ஐ. தே. க. உறுப்பினர்கள், ஐ. தே.க. பொதுச்செயலாளர் காமினி விஜேசேகராவிடம் தெரிவித்துள்ளனர்.

★ பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து அளவுக்கு அதிகமாக இயங்குகிறார்.

★ சந்திரிகா குமாரணதுங்கவுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை கொழும்பு மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றுவதற்கு ஐ. தே. க. உறுப்பினர்களின் எதிர்ப்பையும் மீறி முறையற்ற விதத்தில் ஒத்துழைப்பு வழங்கினார்.

—இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ள மாநகரசபையின் ஐ. தே.க. உறுப்பினர்கள், பதில் மேயர் தனது நடவடிக்கைகளைத் தொடர அனுமதித்தால் கொழும்பு மாநகரத்தின் பெரும்பாலான மக்கள் ஐ.தே.கவுக்கு, எதிராகத் திரும்புவார்கள் என்றும், ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வி கிட்டும் என்றும் கட்சித் தலைமைப் பீடத்தை எச்சரித்துள்ளனர். (உ.)

## விக்ரரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

லெப்டினன்ட் கேணல் விக்ரரின் 8 ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட தமிழீழத்தில் பல பகுதிகளிலும் விக்ரரை நினைவு கூர்ந்து விசேட நிகழ்ச்சிகள். இடம்பெற்றன. [உ–3]

## பொ. ஐ. மு. பிரமுகர் தெரிவு

கொழும்பு, ஒக். 13

தென் மாகாண சபையின் அவைத் தலைவராக பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. விக்கிரமசிங்கா ஏழு அதிகப்படி வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

ஐ.தே.க.சார்பில் போட்டியிட்ட காமினி அபேவர்த்தனாவுக்கு 23 வாக்குகள் கிடைத்தன. விக்கிரமசிங்காவுக்கு 30 வாக்குகள் கிடைத்தன.

## 'ஓஷன் ட்ரேடர்

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள ஆழம் குறைந்த கடலில் செல்லக்கூடிய ஒரேயொரு சரக்குக் கப்பல் "ஓஷன் ட்ரேடர்" என்றும்—

அக்கப்பலே ஞாயிறு அதிகாலை விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டது என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

## நரோமா பயணிகளுக்கு

எதிர்வரும் சனியன்று 'நரோமா' கப்பலில் பயணம் செய்வதற்கு, பணம் செலுத்திய பயணிகளை, அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறையில் தவறாது சமுகமளித்து, தங்கள் பயணத்தை உறுதி செய்யும்படி யாழ். செயற்திட்டப்பணிப்பாளர் கேட்டுள்ளார். [உ]

## ஆலயங்களில்

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் உற்சவகால அருளுரைத் தொடரில் இன்றிரவு 7 மணிக்கு "தெய்வக் கற்பினள்" என்ற தலைப்பில் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் உரையாற்றுவார். [ஐ]

## நிவாரண முத்திரைகள்

யாழ்ப்பாணம், ஒக். 13

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண முத்திரைகள் யாழ் புனர்வாழ்வுப் பிரிவில் தயாராகவிருப்பதாகவும் —

உடன் அவற்றை பெற்று மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறும் —

செயலக திட்டப்பணிப்பாளர் சகல பிரதேச செயலர்களையும் கோரியுள்ளார்.


ROTARACT CLUB

# போஸ்கோ

ஆதரவில்

இல. 3, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். மிட்-ரவுண் றோற்றறக்ற் கழகம் நடத்தவுள்ள

## கராத்தே சுற்றுப் போட்டி

பங்குகொள்ள விரும்பும் கராத்தே வீரர்கள் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை உங்கள் போதனாசிரியரிடமே பெற்று ஒப்படைக்கவும்.

அநேகரின் விருப்பத்திற்கமைய விண்ணப்ப முடிவு திகதி மேற்கண்டவாறும், போட்டி ஆரம்பத் திகதி இம்மாதம் 29 ஆம் திகதியில் இருந்து ஒன்றரை வாரங்களும் பின்போடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

திட்டஇயக்குநர்
J.M.R.C.

சி/9326)



யாழ்/ நாயன்மார்கட்டு

அரசடிப்பிள்ளையார் கோயில்

புதிய சித்திரத் தேருக்கான

# "அச்சேற்று விழா"

காலம்: நாளை (14-10-94) வெள்ளிக்கிழமை
நேரம்: நண்பகல் 12-05 — 2-30 மணிக்கு இடையில்

புதிய சித்திரத் தேர் நிர்மாணம்:
ஆறுமுகம் சிற்பாலயம்
திருநெல்வேலி

"சிற்பக்கலாரத்தினம்"
ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியார்
அவர்களின் தலைமையில் நடைபெறும்.

விநாயகர் அடியார்கள் பெரும் திரளாக வந்து விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

தேவஸ்தானம்

(சி–9325)



## பிறந்ததின வாழ்த்துக்கள்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த

செல்வி. செல்லையா லெனிற்சாந்தனா

தனது 24 ஆவது பிறந்ததினத்தை வெகு சிறப்பாகத் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவர் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்
நுண்கலைப் பிரிவு
மாணவ, மாணவிகள்,

(33315)



யாழ். மத்திய கல்லூரியின்

உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்:

MANIPAY HINDU VS J/CENTRAL

(33306)



## தனியார் கல்வி நிறுவனங்களின் உதவு தொகை வழங்கல்

மேற்படி விடயம் தொடர்பாக நடைமுறையில் இருந்து வந்த திகதியில் தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு மாற்றம் செய்துள்ளது. அதன்படி இனிவரும் காலங்களில் செயல்படுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| வலிகாமம் | — | 22ஆம் திகதி, 26ஆம் திகதி காலை 9-00 பி.ப. 5-00 |
| வடமராட்சி | — | 27ஆம் திகதி, 28ஆம் திகதி காலை 10-00 பி.ப. 4-00 |
| தென்மராட்சி | — | 29ஆம் திகதி, 30ஆம் திகதி காலை 10-30 பி.ப. 4-00 |

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

தனியார் கல்வி நிறுவன-ஒன்றியம்.

[சி–9323]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் காடுவளர்ப்புத் திட்டம்

சூழலின் சமநிலையைப் பேணும் பொருட்டும், விறகுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் முகமாகவும் தென்மராட்சியில் உள்ள நம் பகாமத்தில் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு இரண்டாம் கட்ட ஈழப் போரின் பின் யாழ். குடா நாட்டிற்கு தேவையான பெருமளவு விறகு தென்மராட்சிப் பகுதியிலிருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக குடா நாட்டில் காடுகள் அழிந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதனை ஈடு செய்யும் நடவடிக்கைகளில் ஒன்றாக 10 ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் இவ் காடு வளர்ப்புத்திட்டம் மேற் கொள்ளப்படவுள்ளது.

இதற்கென தற்போது இப் பகுதிகளிலுள்ள பற்றைகள் வெட்டப்பட்டு வருகின்றன. மழை ஆரம்பித்ததும் பல இன மரக்கன்றுகள் நடுகை செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. (எ)

# சரணடைய மாட்டேன் என்கிறான் வீரப்பன்

சென்னை, ஒக். 13

தான் இனி பொலிஸிடம் சரணடையப் போவதில்லை என்று சந்தனமரக்கடத்தல் காரன் வீரப்பன் அறிவித்துள்ளான்.

காட்டுக்குள் விறகு பொறுக்கச் சென்ற ஒரு மலைவாசியை அழைத்து இந்தச்செய்தியை பொலிஸாருக்கு கூறும்படி வீரப்பன் அனுப்பினான் என்று தெரிவிக்கப்படுகிறது. வீரப்பனை நேரில்பார்த்த அம்மலைவாசி அதிர்ச்சியில் உறைந்து போய் "சரி நீங்கள் சொல்கிறபடி செய்கிறேன்"—என்று கூறி விட்டு, ஊருக்குள் வந்து பொலிஸிடம் விஷயத்தைத் தெரிவித்தார்.

"நான் உண்மையிலேயே பொலிஸிடம் சரணடைய நினைத்தேன். ஆனால் பொலிஸார் என்னை அலட்சியப்படுத்தி விட்டார்கள். நான் பலமிழந்து விட்டேன். அதனால்தான் சரணடையத் துடிக்கின்றேன் என்று பொலிஸார் தப்புக் கணக்கு போட்டு விட்டார்கள். சுட்டுத்தள்ளுவோம் என்று பொலிஸார் அறிவித்தனர். அதனால்தான் என் முடியை மாற்றிக் கொண்டு விட்டேன். முடிந்தால் பொலிஸார் என்னைப் பிடித்து பார்க்கட்டும். அவர்களுக்கு தக்கபாடம் படிப்பிப்பேன்"— என்று வீரப்பன் பொலிஸாருக்கு செய்தி சொல்லி அனுப்பினான்.

"தம் மனைவியைக் கைது செய்த பொலிஸார் இருவரையும் பழிவாங்காமல் விடமாட்டேன்"— என்றும் வீரப்பன் கூறியிருக்கிறான். (இ-எ)


யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வரையுள்ளது

## பதவி வெற்றிடம்

### ஆளணி முகாமையாளர்

ஆளணி முகாமையாளருக்கான பதவி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சம்பள அளவுத்திட்டம்:**

113-8 ஆவது — (10 ஆவது)
1005 — 1705
40 X 5 — 50 X 10

இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இதர படிகளும்)

**கல்வித் தகைமைகள்:**

1 ஆவது கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் காரியாலய உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

மேற்படி பதவியுடன் தொடர்புடைய எழுதுநர் பதவியில் 10 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

பட்டயம் பெற்ற செயலாளர்கள், நிர்வாகத்தர்கள் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழிற்தாபனம் ஒன்றில் ஆளணி முகாமை நிர்வாக முகாமையில் மேற்பார்வை மட்டத் தரத்தில் 04 வருட காலங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் நராதரப் பத்திரம் (உயர்தரம்)/க.பொ.த. பரீட்சை (உயர்தரம்)இல் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்தாபனம் ஒன்றில் ஆளணி முகாமை / நிர்வாக முகாமைப் பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

பிணைப்பணம் தெரிவு செய்யப்படின் ரூபா **5,000/-** செலுத்துதல் வேண்டும்.

**வயதெல்லை:**

18 — 40 வரை.

**விண்ணப்ப முடிவு திகதி:**

**24-10-1994** ஆம் திகதி
திங்கட் கிழமை வரை

**குறிப்பு:**

ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. சங்கத்தினால் ரூபா 10/- இற்கு விற்பனை செய்யப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**பொது முகாமையாளர்**
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

-பதில் பொது முகாமையாளர்.
27 - 09 - 1994. (சி-9316)


யாழ். மாவட்டத்தில்

# 6 ஆயிரம் ஹெக்டேயரில் நெற்செய்கை பாதிப்புற்றது

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையினால் சுமார் 6 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மொத்தம் 10 ஆயிரத்து 366 ஹெக்டேயர் வயல்களில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது வழக்கம். இதில் இம்முறை சுமார் 4 ஆயிரம் ஹெக்டேயரில் மட்டுமே நெல் விதைப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய நிலப்பரப்பில் மழை வெள்ளம் வற்றாமையினால் நெல் விதைப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

பெரும் மழையால் வட்டுக்கோட்டை, அராலி, நவாலி, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் உள்ள வயல்கள் வெள்ளம் பெருமளவில் தேங்கியுள்ளது. இப் பகுதியில் வெள்ளம் வற்றிய பின்னரே நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட வேண்டும்— என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை— விதை முளைப்பதற்கு 24 மணி நேரத்திற்குள் "கோல் 2ஃ" என்ற களை நாசனியை விசுறுமாறு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (ஐ-17)

# தபால் அடையாள அட்டை: விண்ணப்பிக்கக் கோரிக்கை

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தபால் அடையாள அட்டை தேவையான மாணவர்கள் கடைசிநேரம் வரை காத்திருக்காது உடனடியாக விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை தபால் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் அடையாள அட்டை எடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று வட மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் கேட்டுள்ளார். (இ-4)

# 32 பொலிஸ் அதிபர்களுக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஒக். 13

32பொலிஸ் அதிபர்கள் இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து சிரேஷ்ட பொலிஸ் அதிபர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் ரி. கே. ஜெயராஜன், ஆர். ஜி. இக்னேஷியஸ், ஏ. ஈ. சர்வானந்தன், சி. மகேசன் ஆகிய தமிழர்களும் உள்ளனர். (ஐ-எ)

# வட்டு. இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஒக். 13

வட்டு. இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்பவிழா. நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா 15 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும்.

கல்லூரி அதிபர் திரு. நா. ஜெயநாயகம் தலைமையில் காலை 10 மணி முதல் நடைபெறும் நூற்றாண்டு ஆரம்ப விழாவிற்கு முதன்மை விருந்தினராக சங்கானைக் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு.ந. மதியும் கலந்துகொள்வார்கள்

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்கள்.

சனிக்கிழமை மாலை 3மணி முதல் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வலயம் -2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி முதன்மை விருந்தினராகவும் தமிழீழக் கல்விக்கழகத்தைச் சேர்ந்த திரு. க. அருள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (க)

# கடவுச் சீட்டு விண்ணப்பங்கள் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். செயலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவங்கள் முடிவடைந்து விட்டன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களிலும் கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவங்களுக்கு தட்டுப்பாடு நிலவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-17)

# யாழ். நகரகல்லூரிகளில் நுண்கலை மாணவரமைப்பு

கல்லூரிகளில் நுண்கலை மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக யாழ்— பட்டின வட்டார இசைப் பேரவை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

முதலில் யாழ்— பட்டின வட்டார பெருங்கல்லூரிகளில் மட்டுமே நுண்கலை மாணவர் அமைப்பு செயல்படும் என்று இசைப்பேரவை அமைப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

# மரம் நடுகைக்கு மாநகரசபை திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 13

மழை காலம் ஆரம்பித்ததனை அடுத்து யாழ்.மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மரங்களை நடுவதற்கு யாழ். மாநகராட்சி மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். நகர் மற்றும் சில இடங்களில் மரங்கள் நடப்படும் என்றும்—

மரங்களை நட்டுப் பராமரிப்பதற்கான கூடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-17)

# பூவோடை மயானத்தை அபிவிருத்தி செய்யத்திட்டம்

வலிகாமம் தெற்கு, ஒக். 12

வலிகாமம் தெற்குப் பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட பூவோடை இந்து மயானத்தில் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பிரதேசசபைச் செயலர் திரு. ஆ. மகாலிங்கத்தின் மேற்பார்வையில் மயான அபிவிருத்திச்சங்கம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் — உரும்பிராய் வீதியில் இருந்து மயானம் வரை வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகளை வெட்டி துப்புரவு செய்தல் —

மயானத்தின் தண்ணீர் பாவனைக்கு ஏற்புடையதாக அங்குள்ள கிணற்று நீரை சுத்தமாக்குதல் —

மயான மடத்தை சுற்றியுள்ள கற்களை அகற்றி, புல் பூண்டுகள் செடி கொடிகளை அழித்தல் —

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் உதவியுடன் மரங்கள் பூங்கன்றுகளை நடல் — போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள அபிவிருத்தி சங்கம் திட்டமிட்டுள்ளது. (இ-152)

# வன்னி விவசாயிகளுக்கு அறிமுக அட்டை விநியோகம்

போராட்ட காலத்தில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் சீரான எரிபொருள் மற்றும் உள்ளீடு விநியோகங்களை மேற்கொண்டு விவசாயிகள் நன்மையடையுமுகமாக அறிமுகப்படுத்தப்பட்ட கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம் தற்போது வன்னி மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.

தற்போது வவுனியாக் கோட்டம் நயினாமடுப் பிரதேசத்தில் இவ் அறிமுக அட்டை விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும்— ஏனைய பகுதிகளுக்கும் இது விஸ்தரிக்கப்படவுள்ளதால், கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு இவ் அறிமுக அட்டையைப் பெற விண்ணப்பிக்குமாறும்— இப் பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவத்தினர் கேட்டுள்ளனர். (இ)

# நொத்தாரிசு சட்டம் திருத்தி அமைக்கப்படும்

கொழும்பு, ஒக். 13

நொத்தாரிசு சட்டம் திருத்தி அமைக்கப்படும். காலத்தின் தேவைக்கு ஏற்ற விதத்திலும் நொத்தாரிசு சேவையின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காகவும் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பதிவாளர் நாயகம் திருத்தச் சட்டத்துடன் இந்தத் திருத்தச் சட்டமூலமும் உருவாக்கப்பட்டு வருவதாக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள், கூட்டுறவுத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார். உத்தியோக பூர்வ அங்கீகாரம் பெற்ற பின்னர் இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நொத்தாரிசு சட்டம் 1902 ஆம் ஆண்டு முதல் தடவையாக அறிமுகம் செய்யப்பட்டது. 74 ஆம் ஆண்டு வரை இதற்குப் பல தடவைகள் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அதற்குப் பின்னர் 20 வருட காலமாக எந்தவித திருத்தமும் செய்யப்படவில்லை. (க)

# குடிதண்ணீர் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க ரூ.7கோடி50லட்சம்தேவை

## யாழ். மாநகரசபை பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாநகராட்சி மன்ற குடிதண்ணீர் திட்டத்தை புனரமைத்து மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏழரைக்கோடி ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகர பொறியியலாளர் பி. தவராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி கோண்டாவில் ஆகிய இடங்களில் உள்ள "பம்ப்"புகளை திருத்தியும் — மற்றும் குருநகர் மடம்வீதி ஆகிய இடங்களில் உள்ள தண்ணீர்த் தாங்கிகளை புனரமைத்தும் — குழாய் தண்ணீர் விநியோக திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கே இந்நிதி தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (இ-17)

# மரபு வழி தமிழ்க் கல்வியை வளர்க்க அரும் பணியாற்றும் கல்வி நிறுவனம்

சிவபெருமான் 'முன்னைப் பழமைக்கு முன்னைப் பழமையனாயும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாயும்விளங்குவான் என்பது மணிவாசகப் பெருமானின் உறுதியான நம்பிக்கை. ஓர் இனத்தின் உயிர்ப்பினைத் தெரிந்து கொள்ள அதன்மொழியே உறுதுணையாய் நின்று உதவுவது அதுவும்பரம்பொருள் போலப் பழமையின் செழுமையையும் புதுமையின் எழுச்சியையும் ஒரு சேரத்தன்னுள் அடக்கி, என்றும் இளமை குன்றாது நிலவுதல் வேண்டும். இந்தச் 'சீரிளமைத் திறம்' வாய்ந்த தமிழ் மொழியானது புதுமையை நோக்கி விரைந்து முன்னேறுகின்றது என்பதை ஏற்றாலும், பழமையைப் போற்றும் பாங்கு அருகி வருவது கவலை தருவதாகும். இக்கவலையைப் போக்கி 'தொன்மை மறவேல்' என்ற குறிக்கோளை முன்வைத்து, எழுபத்து நான்கு ஆண்டுகளின் முன்பு தொடங்கப்பட்ட கல்வி நிறுவனமே யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம். இதனைநிறுவியவர் அந்நாள் மாவட்டக் கல்வி அலுவலரான அமரர் முகாந்திரம் சி. சதாசிவஐயர் அவர்கள் தலைசிறந்த தமிழறிஞர்களும், வடமொழிவல்லாரும் சங்கத்தில் இணை[ந்து] ... மொழியும் தென்றமிழும் வளர்த்த வரலாறு மாண்பு மிக்கதாகும்.

பழம் பெருந்தமிழிலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள் புதியனவாய் எழுந்த மரபு வழித் தமிழ் நூல்களை மரபு முறையாகக் கற்று, பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் தேர்வுகளுக்குத் தோற்றித் தேர்வு பெறவும், தேர்வு பெற்றோர் தமிழாசிரியராய் அமர்ந்து மாணவரைத் தமிழ் மரபுணர்ந்து கற்க வழிகாட்ட உதவியும் கடந்த எழுபதாண்டுகளுக்கு மேலாக எமது சங்கம் பெருந்தொண்டாற்றி வருகிறது; தமிழ்மட்டுமன்றி வடமொழி, ஆங்கிலம், வரலாறு, இந்து சமயம் என்பவற்றையும் பரீட்சைப் பாடங்களாயாக்கி அவற்றிலும் தேர்ச்சி பெற கற்பிக்கும் திறனை ஆசிரியர்களிடையே வளர்ப்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளோம்.

பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர்த் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்குத் தமிழீழத்தில் உள்ள ஐந்து கல்விக் கோட்டங்களில் (யாழ்ப்பாணம் – வேலணைக் கோட்டங்களை ஒன்றிணைத்து ஆறு கல்விக்கோட்டங்களை ஐந்தாகக் கொண்டு) வகுப்புக்கள் நடத்தப்பட்டன. மரபு வழித் தமிழறிஞர்களான பண்டிதர்கள், வித்துவான்கள், தமிழறிஞர்கள், ஆசிரியர்களாய் அமர்ந்து கற்பித்தனர். எனினும் ஆசிரியர் பற்றாக்குறையாலும், மாணவர் ஒழுங்காய் வருகை புரியாமையாலும், பாடநூல்கள் பெறுவது கடினமாயிருந்தமையாலும் மேற்குறித்த தேர்வுகளில் (1994) எதிர்பார்த்த அளவு பெறுபேறுகள் கிட்டவில்லை. எனினும் மனஞ்சோராது தொடர்ந்து இவ்வாண்டும் வகுப்புக்களை அவ்வக்கோட்டங்களிலே கூடிய [விரை]விலே தொடங்க எண்ணியுள்ளோம். வகுப்புக்களின் [ஆரம்]ப தொடக்கம் பற்றிப் பத்திரிகைகள் வாயிலாக அறிவிப்பதெனச் சங்கம் முடிவுசெய்துள்ளது.

உ.தவுகின்றது; கருத்தரங்குகள், மாநாடுகள், தமிழ் எழுச்சி விழாக்கள்,மலர்வெளியீடுகள், பழந்தமிழ் நூற்பதிப்புக்கள் என்று தமிழ் சார்ந்த பல துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கின்றது; ஒரு காலத்தில் வடமொழிப் பண்டிதர் ... யையும் இதற்குண்டு. இன் ...

இவ்வகுப்புக்களை நடத்த ஊக்குவித்தும், நூல்கள், ஆசிரியர் கொடுப்பனவுகள், க. பொ. த. (உ/த) முன்னோடிப் பரீட்சையில் தமிழில் முதன்மை பெற்றோருக்கு நிதிப்பரிசில்கள் வழங்கியும் வரும், வி. பு. தமிழ் வளர்ச்சிக்கழகத்தினதும் கல்வி மேம்பாட்டுப் பேரவையினதும் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்களுக்கும், வகுப்புக்களை நடத்த ஆக்கமும், ஊக்கமும், மேற்பார்வையும் வழங்கிவரும் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர்க்கும் சங்கம் தனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. சங்கப் பொதுக்கூட்டம் 15-10-94 சனிக்கிழமை மு. ப. 9 மணிக்கு, நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நிகழும் என்பதையும், இவ்வாண்டு, பாலபண்டிதர், பிரவேச பண்டிதர்த் தேர்வுகளிலே தேர்வு பெற்றோருக்குச் சான்றிதழ்கள் கூட்டத்தில் வைத்து வழங்கப்படும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

"தமிழ் வாழத் தமிழினம் வாழும்"

க. சொக்கலிங்கம் (சொக்கன்)
துணைச் செயவர்
(பா. ஆ. தி. பா. அ. ச)

★

## புலிகளின் குரல் வானொலியில்

**13 — 10 — 1994**
**வியாழன் இரவு**

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்த மருத்துவக் குறிப்புக்கள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — "யுத்த சேத விபரம் சேகரிப்பு" உரையாடல்.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ஏட்டிலிருந்து நிர்வாகக் கலையைத் தெரிந்து கொள்ளுங்கள் என்ற நூலிலிருந்து "ஜப்பானின் அணுகுமுறை" எனும் கட்டுரையின் சில பகுதிகள்
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

**14— 10 — 1994**
**வெள்ளி காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயக பாடல்கள் என்பன இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சேர் (F) போம் பிறசியர்ஸ், சில்வர் சில்ட் சொக்ஸ் வகைகள், பெனியன்கள், நூல், எலாஸ்டிக் வகைகள், யட்டிகள் விற்பனைக்கு உண்டு. சிறிமுருகன், 303, காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம். (33284)

நல்ல நிலையிலுள்ள சிறுவர்களுக்கான Lumala, A-VON சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 52B, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (33308)

### கோழிக்குஞ்சு விற்பனை

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். பதிவு செய்து 19-10-94 புதன்கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33295)

### வகுப்புக்கள் ஆரம்பம்

சாவகச்சேரி நகர் சிக்கனகடன் உதவு கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில் 14-10-94 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வகுப்புகள் ஆரம்பம்: தையல் வகுப்பு ஆசிரியர் திருமதி ராஜி பீடில், கேக் ஐசிங் வகுப்பு ஆசிரியர் திருமதி செல்வராணி தேவராஜா, நடனம் ஆசிரியர்கள் செல்விகள் கௌரி, காயத்திரி (சகோதரிகள்) இடம்: 10, தேவாலய வீதி, சாவகச்சேரி. (7955)

### மிருதங்க வகுப்பு

தரமான ஆசிரியர் மூலம் சனி, ஞாயிறு மிருதங்க வகுப்புகள் நடைபெறுகின்றன. விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டியது: கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (33297)

### சித்திர வகுப்புகள்

கலையகத்தின் புதிய சித்திர வகுப்புகள் விஜயதசமி தினத்தன்று 14-10-94 பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகும். இல. 6, பென்டிக்கோஸ் வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். (33280)

### மண்ணுக்கு உரம் ஊட்ட

மழை வந்தது. பூமித்தாயின் உள்ளம் குளிர்ந்தது. பூமித்தாய்க்குச் சக்தி இயற்கைப் பசளை, நீமியா (வேப்பம்) உரம் ஊட்டினால் அள்ளித்தருவாள். வளம் பெருக்குவாள் வயிற்றுப்பசி போக்குவாள். "சக்தி இயற்கைப் பசளை, நீமியா உரம் என்பன அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. "மில்க்வைற்". (சி-9321)

## 'கெல்ற்' வகுப்பு

யாழ். இந்துக்கல்லூரி "கெல்ற்" வகுப்பு மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை [illegible] பகல் 4 மணியளவில் நடைபெறவிருக்கும் செய்திட்ட அறிக்கை சமர்ப்பண நிகழ்வுக்கு சமுகம் அளிக்குமாறு கற்கைநெறி இணைப்பாளர் கேட்டுள்ளார். (எ)

## அச்சுவேலியில் மோசமான வீதி

யாழ்ப்பாணம், ஒக். 13

அச்சுவேலி மகாவித்தியாலய வீதி (றஜீ பள்ள வீதி) கடந்த பல வருடங்களாக எந்தவித திருத்தவேலைகளும் செய்யப்படாத நிலையில் இருந்து வருகிறது.

மழைகாலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இவ்வீதியால் போக்குவரத்துச் செய்வது மிகச்சிரமமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-16)

## வீதி ஓர மர பாதுகாப்பு கூடு புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

சுன்னாகத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் வரையிலான வீதியோர மரங்களில் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த சேதமடைந்த கூடுகள் அண்மையில் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளன.

தியாகி திலீபன் நினைவாக மேற்கொள்ளப்பட்ட இச் சிரமதானப்பணியில் கிராமிய உற்பத்திக் குழு அலுப்பவர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர். (இ)

---

வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி,

வவுனியா

# பதவி வெற்றிடங்கள்

பொருத்தமான தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கணித விஞ்ஞானத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்**

*சம்பள அளவுத் திட்டம்:*

மாதமொன்றுக்கு ரூபா 10,650 - 5X325 - 12,275 அத்துடன் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

*கல்வித் தகைமைகள்:*

1. (அ) கணிதம் அல்லது புள்ளிவிபரவியல் சிறப்புப்பட்டத்தில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவிற் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) கணிதம் அல்லது புள்ளிவிபரவியல் சிறப்புப் பட்டத்தில் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(இ) சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் பரிந்துரைக்கமைய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

அத்துடன்

2. (அ) சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சிப் பட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய பட்டமானது பதிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து இரண்டு கல்வியாண்டுக்குக் குறையாத காலத்தினுள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் பரிந்துரைக்கமைய பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அத்துடன்

3. மேலே 2இல் கூறப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்திய காலம் உட்பட, பின்வருவனவற்றில் ஒன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் குறைந்தது ஆறாண்டு அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
   (i) பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்தில்.
   (ii) தொழில்சார் அனுபவம்.
   (iii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் செய்த ஆராய்ச்சி.

**2. கணித விஞ்ஞானத்தில் கல்லூரி விரிவுரையாளர்**

*சம்பள அளவுத் திட்டம்:*

மாதமொன்றுக்கு ரூபா 6,050—16X250—10,050 அத்துடன் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

*கல்வித் தகைமைகள்:*

1. (அ) கணிதம் அல்லது புள்ளிவிபரவியலில் சிறப்பு அல்லது பொதுப்பட்டத்தில் சித்தி பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) கணிதம் அல்லதுபுள்ளி விபரவியலில் சிறப்பு அல்லது பொதுப்பட்டத்தில் சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின் படிப்புத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

அத்துடன்

2. பல்கலைக்கழகத்தில் அல்லது அதையொத்த நிறுவனத்தில் கற்பித்தல் அல்லது ஆராய்ச்சியில் மூன்றாண்டு அனுபவத்தையும் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமையையும் கொண்டிருக்க வெண்டும். அத்தகைய பட்டப்பின் தகைமையானது பதிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து ஒரு கல்வியாண்டுக்குக் குறையாத காலத்தினுள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

**3. கணித விஞ்ஞானத்தில் கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)**

*சம்பள அளவுத் திட்டம்:*

மாதமொன்றுக்கு ரூபா 5,270—6X130—6,050. அத்துடன் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

*கல்வித்தகைமைகள்:*

மேலே கணித விஞ்ஞானத்தில் கல்லூரி விரிவுரையாளருக்குக் கோரப்பட்டனவற்றில் 1இல் உள்ள தகைமைகள் மாத்திரம் போதுமானவை.

**4. கணித விஞ்ஞானத்தில் பிரத்தியேகப் போதகர் (தற்காலிக)**

*சம்பள அளவுத் திட்டம்:*

படிகளுட்பட மாதமொன்றுக்கு ரூபா 4,100 (நிலையானது)

*கல்வித் தகைமைகள்:*

சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

**5. ஆங்கிலத்தில் போதனாசிரியர் — தரம் 11**

*சம்பள அளவுத் திட்டம்:*

மாதமொன்றுக்கு ரூபா 4,750 — 10 X 130 — 6,050 அத்துடன் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

*கல்வித் தகைமைகள்:*

ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டத்துடன் அதே துறையில் கற்பித்தலில் ஐந்தாண்டுக்குக் குறையாத அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

**6. ஆங்கிலத்தில் போதனாசிரியர் — தரம் 111 (வருகை தரு)**

பல்கலைக்கழகக் கொடுப்பனவுகளுக்கேற்ப வேதனம் வழங்கப்படும். அத்துடன் அனுமதிக்கப்பட்ட பயணச் செலவுகளும் வழங்கப்படும்.

*கல்வித் தகைமைகள்:*

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக [illegible] நிறுவனத்திலிருந்து ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது டிப்ளோமாவினைக் கொண்டிருத்தல்

அல்லது

(2) ஆங்கிலத்தில் முதற்தர ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைக் கொண்டிருத்தல்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், அனுபவம் மற்றும் தொடர்புடைய தகவல்கள் ஆகியவற்றுடன் இரண்டு நடுவர்களின் பெயர், முகவரிகள் ஆகியவை உள்ளடக்கியதாக உதவிப் பதிவாளர், வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி, புகையிரத நிலைய வீதி, வவுனியா என்ற முகவரிக்கு 1994 நவம்பர் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் / கல்வி நிறுவனங்கள் / அரச திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட அமைப்புக்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் தத்தமது நிறுவனத் தலைவர்களுக்கூடாக விண்ணப்பிக்க வேண்டும். எனினும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தின் ஒரு பிரதியை நேரடியாக மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்ப முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

—பணிப்பாளர்.

வடமாகாண இணைக்கப்பட்ட
பல்கலைக்கழகக் கல்லூரி,
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.
[illegible] 10 1994 [ஞி 9312]

---

அரசினர் பொது (போதனா) வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

### கேள்விப் பத்திரம்

# சலவை ஒப்பந்தம் - 1995

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் அழுக்குத் துணிகளை 01-01-1995 தொடக்கம் 31-12-1995 வரை சலவை செய்வதற்கான ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 04-11-1994 காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாகக் கேள்விகள் நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமான ரூபா 150/- ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் இக்காரியாலயத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் நேரடியாகச் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம்.

கேள்விப் பத்திரங்களை அவைகள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் என்னால் வழங்கப்படும் பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவு திகதியன்று காலை 10-00 மணிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப் பணமாக ரூபா 1,500/- செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 04-11-1994 காலை 10-00 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும் போது கேள்விகாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலலாம்.

மேலதிக விவரங்களை இவ் வைத்தியசாலையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
செல்வி நவமலர் கனகரத்தினம்,
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

10-10-1994 [சி-9311]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அவனியில்: 24 — 06 — 1918

அமரர் உலகில்: 13 — 09 — 1994

### சோமநாதர் பொன்னுத்துரை (செல்லக்குட்டி)

(திரியாய் திருகோணமலை)

எங்கள் குடும்பத்தின் வழி காட்டியாய் வாழ்ந்து, எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த மாதம் அமரராகிய எம் தந்தையின் மரணச் சடங்கில் பங்குபற்றியவருக்கும், சகல உதவிகளையும் புரிந்த உற்றார், உறவினருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இன்று (13-10-94) வியாழக்கிழமை காலையில் புலோலி கிழக்கு நீண்டியம் பற்றையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புலோலி கிழக்கு. (7957)

---

# விஜயதசமி பூஜையும் நாள் வகுப்பும்

**14-10-94** வெள்ளி மாலை 3-00 - 4-30 மணி வரை நாள் வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பெறும்

ஒவ்வொரு சனி, ஞாயிறு நாட்களில் காலை 8-00 — 12-00 மணிவரை சிறந்த இசைக் கலைஞர்களால்

✶ வாய்ப்பாட்டு ✶ வயலின் ✶ வீணை ✶ மிருதங்கம் ✶ பரதநாட்டியம்

என்பன பயிற்றுவிக்கப்பெறும்.

மேலும் விவரங்களுக்கு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

# 15-வது ஆண்டு இசை விழா

### தொடர்ந்து (15) பதினைந்து தினங்கள்

குறிப்பு:

இளங்கலைஞர் மன்ற 15 ஆவது ஆண்டு இசை விழா **10-02-1995 — 24-02-1995** வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசை விழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், என்பவற்றில் தனி குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதிசெய்து 30-11-1994 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

– மேற்படி மன்றத்தலைவர்.

[சி-9319]

---

## பிறந்த தினத்தில் நினைவு கூருகின்றோம்



### செல்வன் கந்தசாமி ஜெபிச்சந்திரன் (ஜெபி)

மலர்வு: 13 — 10 — 1968

உதிர்வு; 11 — 03 — 1994

பாசத்தின் தன்மை காட்டி
பண்பின் பெருமை சொல்லி
தெய்வத்தின் தொண்டாற்றி
துயில் கொண்ட வேளையிலே-எங்கள்
மனம் துவண்டு போனதைய்யா
வாடைக் குளிராய் வாட்டுதையா-உம்பிரிவு.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிறந்த தினத்தில் நினைவு கூரும்:
-குடும்பத்தினர்.

இல: 211/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (7956)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 09 — 07 — 1916

உதிர்வு: 13 — 09 — 1994

திருமதி

### பட்டம்மாள் தில்லையம்பலம்

பண்பின் திருவுருவாக, பாசத்தின் உறைவிடமாக விளங்கிய எம் அன்னை எங்கள் உடல் நலம் பேணியதிலும் சிறக்க உளநலம் பேணினள். உயிரின் உயிராய் எம்மில் உயிரையே வைத்த எம் அன்னையே! உங்கள் உயிர் பிரிந்து ஓர் திங்கள் ஆனாலும் உம் நினைவாகவே வாழும்;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

75, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (சி-9503)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

## திறவுகோலாக அமையட்டும்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இன்று புதிய அத்தியாயம் ஒன்று எழுதப்படுகிறது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முன்முயற்சியாக, சந்திரிகா தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இன்று ஆரம்பப் பேச்சுவார்த்தை தொடங்கப்படுவதே அந்தப் புதிய அத்தியாயம்

இப்பேச்சுவார்த்தை, சமுக நிலையில் தொடர்ந்து நடைபெற்று, முன்னேற்றம் கண்டு, நல்ல பெறுபேறை, முடிவைத் தர வேண்டும் என்பதே சிங்கள மக்களில் பெரும்பாலோரினதும், தமிழ் மக்களினதும் பெரு விருப்பமாக உள்ளது. இன்றைய ஆரம்பம், நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்கும் நன்னாளாக வேண்டும் என்பதே அவர்களின் அக்கறை.

இனப்பிரச்சினை இந்த நாட்டின் மிக முக்கிய விவகாரம், அது இன்று நேற்றுத் தோன்றியது அல்ல. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னரே தமிழர்களைஇரண்டாந்தரப் பிரசைகளாக்கும் நடவடிக்கைகள் தொடங்கப் பட்டுவிட்டன. இவ்விவகாரம் குறித்து சிங்கள - தமிழ்த் தலைவர்களுக்கிடையே பல பேச்சுவார்த்தைகள்நடந்தன; ஒப்பந்தங்கள் கூட கைச்சாத்திடப்பட்டன. ஆனால் பிரச்சினையோ தீரவில்லை. தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகள் இன்னும் கிடைக்கவில்லை.

எனினும், இன்றைய பேச்சுவார்த்தை முற்றிலும் வேறுபட்ட ஒரு பின்னணியில் ஆரம்பமாகிறது. சுமார் நான்கேகால் வருடங்களாக நடைபெறும் பெரிய அளவிலான போர் — இரு நாடுகளுக்கிடையே இடம் பெறுவது போன்ற போர் — தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் இன்றைய பேச்சு ஆரம்பமாகிறது.

அது மட்டுமன்றி, இனப்பிரச்சினையை இராணுவத் தீர்வினால்அன்றி சமாதானப் பேச்சினாலேயே முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று விரும்பும் அரசாங்கம் இதில் கலந்து கொள்கிறது.

சமாதானக் கதவுகளை விடுதலைப் புலிகள் நீண்டகாலமாக திறந்து வைத்திருந்தபோதிலும், முந்திய அரசு அதில் ஆர்வம் காட்டாமல், வேளைக்கு வேளை ஒவ்வொரு நிலைப்பாட்டில் நின்று காலத்தைக் கடத்தியது. ஆனால் புதிய அரசின் அணுகுமுறை முற்றிலும் வித்தியாசமாக இருக்கும் பின்னணியில் இன்றைய பேச்சு ஆரம்பமாகிறது.

பேச்சுவார்த்தை மேசை என்பது பல விடயங்கள் ஆராயப்படும் இடம். அங்கு பல முரண்பாடுகள் தோன்றும். தடங்கல்கள் ஏற்படலாம். இடையில் முறிவு ஏற்பட்டு மீண்டும் தொடரலாம். ஆனால் தீர்வு ஒன்றை எய்தியே ஆவது என்ற மன உறுதியுடனும், அதற்கான மனப்பாங்குடனும் இருதரப்பாரும் செயற்பட்டால் முடிவு நல்லதாகவே இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக இருதரப்பிலும் விட்டுக் கொடுத்து, வாங்கும் நுட்பமே பிரதானமானது.

இன்றைய பேச்சு, இடைமட்ட, உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலையை — பின்னணியை — தோற்றுவிக்கும் ஒன்றாகவே அமையவுள்ளது. தமிழ் மக்களுக்குள்ள அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது, அத்தியாவசிய சேவைகளை சீராக்குவது, போர் நிறுத்தத்தைக் கொண்டுவருவது போன்ற ஆரம்ப அம்சங்களே இம்முறை ஆராயப்பட உள்ளன. ஆகையால் இன்றைய பேச்சு சுமுகமாக நடந்தேறி நல்ல விளைவுகளைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

அத்திவாரமும், ஆரம்பமுமான இன்றைய பேச்சு வெற்றி அளித்தால்தான், தீர்வைக் காண்பதற்கான முதலாவது அடியை எடுத்து வைக்க இயலும். இது நல்ல ஆரம்பமாக அமைய வேண்டும் என்ற தமிழ் மக்களின் விருப்பத்தைக் கூறி, பேச்சு நடத்துவதற்காக தமிழ் மண்ணில் காலடி வைக்கும் சந்திரிகா அரசாங்கத்தின் பிரதிநிதிகளை மக்கள் சார்பில் வரவேற்கிறோம்.

இந்தப்பணி தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கான பாதையின் திறவுகோலாக அமையப் பிரார்த்திக்கிறோம்.

# குவைத் நாட்டின் எல்லையிலிருந்து ஈராக் படைகள் வெளியேற ஆரம்பம்!

## எனினும் அமெரிக்கா தொடர்ந்து படைக்குவிப்பு

பாக்தாத், ஒக். 13

குவைத் எல்லையிலிருந்து ஈராக் தனது படைகளை வாபஸ் பெற ஆரம்பித்துள்ளது.

எனினும் அமெரிக்கா தொடர்ந்து தனது படைகளை வளைகுடாவில் குவித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா ஏற்கனவே 19 ஆயிரம் துருப்புக்களை வளைகுடாவுக்கு அனுப்பி உள்ளது. மேலும் துருப்புக்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரெஞ்சுப் போர்க்கப்பல் ஒன்றும் வளைகுடா நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் இந்தப் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

ரஷ்யா தனது தூதுவர் ஒருவரை குவைத்துக்கும் ஈராக்குக்கும் அனுப்பி உள்ளது.

ஈராக் மீதான ஐ. நா. பாதுகாப்புச் சபையின் பொருளாதாரத் தடைகள் அகற்றப்பட வேண்டும் என்று குவைத் கோரி வருகிறது.

இந்தத் தடை காரணமாக 25 லட்சம் ஈராக்கிய தாய்மாரும் குழந்தைகளும் ஊட்டச் சத்தின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐ. நா குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் தெரிவிக்கிறது.

இதற்கிடையில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பெரி குவைத்துக்குச் சென்று அங்குள்ள அமெரிக்கப் படையினரைப் பார்வையிட்டார். (இ)

### தபால்களை சேர்க்குக

வெளியூருக்கான தபால்களை கோமாரி கப்பல்மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே இன்று வியாழன் காலை 8-30 மணிக்கு முன் பொதுமக்கள் தமது தபால்களை யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபால்அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

### கஷ்ட நிவாரண அலவன்ஸ் இன்னும் இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்களில் 1990க்கான கஷ்ட நிவாரண அலவன்ஸ் இன்னும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

வடபகுதியில் உள்ள ஏனைய திணைக்களங்கள் இந்த அலவன்ஸை உரிய காலத்தில் வழங்கிவிட்டன என்றும்—

ஆனால் யாழ். போதனா வைத்தியசாலை மட்டும் இதனை வழங்காமல் உள்ளது என்றும் கூறப்படுகிறது. (இ-15)

### பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 18

எரிகாயங்களுக்காளான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நல்லூர், நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த தெய்வேந்திரம் புனிதம் (33 வயது) என்ற பெண் கடந்த ஞாயிறு மரணமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-15)

### 1992 இல் ஒதுக்கப்பட்ட
## பிரிட்டிஷ் ஜெனரேற்றர் இன்னும் வந்து சேரவில்லை

பிரிட்டிஷ் அரசினால் 1992 இல் வல்லை வைத்தியசாலைக்கென ஒதுக்கப்பட்ட 14 கே.வி சக்தி வாய்ந்த ஜெனெரேற்றர் இன்னும் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே போன்று 1992 இல் இந்த வைத்தியசாலையின் சந்திரசிகிச்சைப் பிரிவுத்தேவையான பொருகள் சிலவற்றுக்கு சுகாதாரப் பகுதியினரால் அனுமதி வழங்கப்பட்டது என்றும் —

அப்பொருள்களும் இன்னும் வந்து சேரவில்லை என்றும்—

ஆனால் அப்பொருள்களுக்கான ரசிது மட்டும் வந்து விட்டது என்றும் தெரிவிக்கப் படுகிறது. (இ-155)

### கொழும்பில் நடைபெறவுள்ள
## பாப்பரசரின் கூட்டத்தில் 6 லட்சம் பேர் பங்குபற்றுவர்!

கொழும்பு, ஒக். 13

எதிர்வரும் ஜனவரியில் இலங்கை வரும் புனித பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் கொழும்பில் பங்குபற்றும் பிரார்த்தனைக் கூட்டத்தில் சுமார் ஆறு லட்சம் மக்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுவதாக கண்டி ஆயர் வி. பெர்னாண்டோ தெரிவித்தார்.

இப் பிரார்த்தனையின் போது வண. ஜோசப்வாஸ் அடிகளை புனிதராக பாப்பரசர் திருநிலைப்படுத்துவார் என்பது தெரிந்ததே.

### பொதுத் தேர்தலின் போது முறைகேடாக நடந்த
## 125 க்கு மேற்பட்ட பொலீஸார் இம்முறை பணிபுரிய அனுமதியில்லை

கடந்த பொதுத்தேர்தலின் போது தேர்தல் சட்ட திட்டங்களுக்கு முரணாக அரசியல் வாதிகளின் உத்தரவுகளுக்கு பணிந்து நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 125 க்கு அதிகமான பொலீஸ் அதிகாரிகள் எதிர் வரும் ஜனாதிபதித்தேர்தல் பணிகளில் இருந்து விலக்கி வைக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சு இம் முடிவை எடுத்துள்ளது.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின்பணிப் பின் மீது இம் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-எ-6)

## மாற்ற முடியாத கல்வித் திட்டம் நடைமுறைச் சாத்தியமானதல்ல

### ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 15

''மாற்ற முடியாத கல்வித் திட்டம் ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவது என்பது நடைமுறைச் சாத்திய மானதல்ல. அது விவேகமான செயலும் அல்ல''.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த ''பயிலுநர் ஆசிரியர்களின் சட்டரீதியான அந்தஸ்து'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. நா. சோதிநாதன் தலைமையில் நடந்த அந்தக் கருத்தரங்கில் திரு. மகாசிவம் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டின் கல்விக் கொள்கை, கல்வித் திட்டம் என்பன வளர்ந்துவரும் விஞ்ஞான, தொழில்நுட்ப கணனிமயப்படுத்தப்பட்ட உலகுடன் சமமாகவும்— சமாந்தரமாகவும் வளர்ச்சி அடையக்கூடியதாக அமைதல் அவசியம். இவ்வகையான மாற்றம் இன்றைய உலகில் தவிர்க்கப்பட முடியாததும் கூட.

எனவே இலங்கைக்கும் ஏனைய நாடுகளுடன் போட்டி போட்டு வளர்ச்சி அடையக்கூடியதான— மாற்றப்படக்கூடிய— நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த கல்வித் திட்டம் அவசியமாகும். எனவே எக்காலத்திலும் மாற்ற முடியாத கல்வித்திட்டம் ஒன்றை பொ. ஐ. மு. அரசு தயாரித்து அமுல்படுத்துவதை கல்விச் சமூகமும், கல்விமான்களும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே ஆசிரிய தொழிற்சங்கங்கள் இத்தகைய திட்டத்தை எதிர்க்கும்.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## 135 பட்டதாரிகளுக்கு மாத இறுதியில் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனங்கள் இம்மாத இறுதியில் வழங்கப்படும் என்று கல்விச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் யாழ். செயலக திட்டமிடல் பகுதியால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் 135 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க கல்விச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

இவர்களுக்கு கொழும்பில் பயிற்சி வகுப்பை நடத்திய கல்விச்சேவை ஆணைக்குழு கடந்த மூன்றாம் திகதி முதல் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படுவதாக முன்னர் அறிவித்திருந்தது.

தற்போது முன்னர் அறிவித்தபடி இந்த நியமனங்கள் வழங்கப்படமாட்டாது என்றும் —

இம்மாத இறுதியில் அது பற்றிய விவரம் அறிவிக்கப்படும் என்றும் கல்விச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ-3)

## ஜனாதிபதி தேர்தலுக்குபின் உலக வங்கிக் குழு வரும்

கொழும்பு, ஒக். 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு தமது தூதுக்குழுக்களை அனுப்புவதென உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் தீர்மானித்துள்ளன.

இதனிடையில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தை அடுத்த ஆண்டு மார்ச் - ஏப்ரல் மாதங்களில் பாரிஸில் நடத்துவது என்று உலக வங்கி தீர்மானித்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண அரசு எடுத்து வரும் முயற்சிக்கு உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ஆதரவு தெரிவித்துள்ளன என்று, திறைசேரிச் செயலாளர் ஏ. எஸ். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

ஸ்பெயின் தலைநகர் மாட்றிடில் நடந்த உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவற்றின் ஐம்பதாவது வருடாந்தக் கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தனா கலந்து கொண்டார்.

இலங்கையின் புதிய அரசுக்கு உதவுவதற்கு இரு நிதி அமைப்புகளும் முன்வந்துள்ளதாகவும்அவர் தெரிவித்தார். (ஐ-எ)

### விளையாட்டு நிகழ்வுகள்

புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகம் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும். ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 2.00 மணி:-பொற்பதி வி.க. எதிர் விநாயகர் வி.க.
★ 3.00 மணி;-சில்வண்ரார் வி.க. எதிர் ஞானமுருகன் வி.க
★ 4.00 மணி:- சென்அன்ரனீஸ் வி.க. எதிர் கலைவாணி வி.க (உ-20)

# முயல்கள் போன்று கொல்லப்படும் ஜெனரல்கள் மற்றும் அமைச்சர்கள்

## இதற்குப் பின்னரும் ராணுவத்தீர்வை விரும்புவோர் தலையை மண்ணில் புதைக்கும் தீக்கோழி போன்றோரே

1956இல் இருந்துதொடர்ச்சியாக 1958, 1961, 1974, 1977, 1979, 1981 ஆகிய ஆண்டுகளில் இனக்கலவரங்கள் இடம்பெற்றன. இதன் உச்சமாக 1983 இனக்கலவரம் அமைந்தது.

1983 இனக்கலவரத்தினால் 2 லட்சம் தமிழர்கள் வரையில் அகதிகளாகினர்.

அவர்கள் கப்பல்களில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இக்கலவரத்தின் போது 6 ஆயிரத்துக்கு அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டனர்; காயமடைந்தனர். 15 ஆயிரம் கோடி ரூபா வரையில் உடைமைகளுக்கு சேதமேற்பட்டது.

### கலவரத்தின் பின்னால் சிறில்மத்தியூ

1983 கலவரத்தின் பின்னால் முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் சிறில் மத்தியூ இருந்தார் என்பது நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

1958 கலவரத்தின் போது இனத்துவேஷியான கே. எம். பி. ராஜரத்னா தமிழனின் தோலில் இருந்து தைக்கப்பட்ட சப்பாத்தை அணியும் வரை அமைதியாக இருக்கமாட்டேன் என்று சபதம் எடுத்தார்.

1983 கலவரத்தின்போது ''இறந்த தமிழனே நல்ல தமிழன்'' என்பது சிறில்மத்தியூவின் சபதமாக இருந்தது.

தமிழர்மீது சிங்கள துவேஷிகள் காட்டிய குரோதம் இந்தளவுக்கு இருந்தது. இருந்தும் தமிழரின் சட்டபூர்வமான குறைபாடுகள் எவை என்று இன்னும் சிலர் கேட்கின்றனர்.

### பாதுகாப்பு பகுதி வடக்கு - கிழக்கே

1983 இல் தமிழர்கள் இனரீதியாக அரசாங்கத்தினால் கப்பல்களில் ஏற்றப்பட்டு, அப்புறப்படுத்தப்பட்ட போது, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில்தான் தமிழர்கள் பாதுகாப்பாக வாழமுடியும் என்பது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மிதவாதிகளாக தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமிழ்க் காங்கிரஸாரும் பிச்சைப் பாத்திரம் தூக்கியும் தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. இப்பணியைச் செய்து முடிக்க வடக்கு-கிழக்கு இளைஞர்கள் முன்வந்தனர். அவர்கள் சிங்கள அரசுகளுக்கு பணிந்து போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. ஏகாதிபத்திய மனப்பான்மையுள்ள சிங்களவர்களினால் தங்களின் முதிர்ந்த தலைவர்கள் அவமானப்படுவதை யாழ்ப்பாண இளைஞர்கள் பார்க்க விரும்பவில்லை.

அவர்கள் சொன்னார்கள் ''இவ்வளவும் போதும்; எமது கடைசி இரத்தம் உள்ள வரை நாம் உங்களைப் பாதுகாப்போம்—'' என்று.

### பேரம் பேச துப்பாக்கி

வட்டமேசை [illegible]த்துவது, ஒப்பந்தங்கள் எழுதுவது ஆகிய [illegible] விட்டது. பேரம் பேசுவதற்கு அபாயகரமான சயனைட் வில்லைகளையும் ரி - 56 துப்பாக்கிகளையும் அவர்கள் எடுத்தனர்.

பிரபாகரனுக்குப் பதில் அகிம்சாவாதியான செல்வநாயகத்துடன் பேசி எவ்வளவு இலகுவாக தீர்வைக் கண்டி

> ''யுத்த வெறியர்கள்'' என்ற தலைப்பில் திரு. அமரதாஸா பெர்ணாண்டோ எழுதி 'சண்டே ஒப்சேர்வரி'ல் வெளியான கட்டுரையில் இருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

ருக்கலாம் என்று பிடிவாதம் பிடித்த சிங்கள அரசியல் வாதிகள் இன்று உணருவர்.

சிங்களப் பேரினவாதிகள் இதே தவறைத்தான் தொண்டமான் விஷயத்திலும் இன்று விடுகின்றனர்.

வடக்கு நிலை மலையகத்தில் ஏற்படுவதற்கு முன்னர் தமிழ்த் தீவிரவாதிகள் மலைநாட்டை கைப்பற்றிவிடுவர். தொண்டமான் நீண்ட காலம் வாழ சிங்கள மக்கள் போதி பூஜை நடத்த வேண்டும்.

### கொல்வினின் தீர்க்க தரிசனம்

இன்றைய துக்ககரமான நிலை பற்றி 38 ஆண்டு[illegible] சனமாகக் கூறிய ஒரே தலை[illegible] ஆர்டி சில்வா தான். ''இரு மொழிகள் ஒரு நாடு - ஒரு மொழி இரு நாடுகள்'' என்றார் அவர்.

இன்றும் ஒற்றையாட்சி என்று வகுப்புவாதிகள் கூறிக் கொண்டிருக்கலாம். ஆனால் அரசின் ஆணை வவுனியாவுக்கு அப்பால் கடந்த பத்தாண்டுகளாகச் செல்லாது இருந்து வருகிறது என்பது அப்பட்டமான உண்மை ஆகும்.

இருந்தும் சில முட்டாள்கள் இராணுவத் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.

1983 இல் ஆயிரம் வரையான தமிழ்த் தீவிரவாதிகளே இருந்தனர். இன்று சுமார் 2 லட்சம் பயிற்றப்பட்ட போராளிகள் அங்கு உள்ளனர். நவீன ஆயுதங்களும் அவர்களிடம் உள்ளன.

### முயல்கள் போன்று கொல்லப்படும் தலைவர்கள்

ஜெனரல்கள், பிரிகேடியர்கள், அட்மிரல்கள், விங் கொமாண்டர்கள், ஜனாதிபதி, முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் முயல்கள் போன்று கொல்லப்படுகின்றனர்.

இந்த நிலையிலும் மண்ணுக்குள் தலையைப் புதைத்துள்ள தீக்கோழி போன்று இராணுவத் தீர்வு வேண்டும் என்று கோருகின்றனர்.

நுகேகொட கூட்டத்தில் [illegible]சிரியர் நளின் டி சில்வா பேசினார். ''கிழக்கை துப்புரவு செய்து விட்டோம், வீரமிகு படையினர் வடக்கையும் துப்புரவு செய்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து எமது கலாசாரம், தாய் நாட்டைப் பாதுகாக்க வேண்டும்'' — என்று

எனது நண்பர்களுக்கு கூற விரும்புகின்றேன் வலிமை மிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்கொங் வீரர்களை சில மாதங்களில் சரணடைய வைப்போம் என்றது. நடந்தது என்ன? நீண்ட கால கெரில்லா யுத்தத்தில் ஹோசிமின் அமெரிக்க படையைத் துரத்தி அடித்தார். கம்போடியாவிலும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இதனைத் தான் செய்தது.

### வெற்றிபெற முடியாத யுத்தம்

வடக்கு - கிழக்கு யுத்தம் வெற்றிபெற முடியாத ஒன்றாகும். ஏனைய மக்களின் குழந்தைகளின் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை நீங்கள் யுத்தம் நடத்தத்தான் போகிறீர்களா?

### காணி விடயத்தில் பாரபட்சம்

காணி விஷயத்தில் தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர்.

நாட்டின் எந்தப் பகுதியிலும் சிங்களவர் வாழவும் வியாபாரம் செய்யவும் உரிமை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் — தமிழர் வாழும் பிராந்தியங்களில் தமிழரின் இனவிகிதாசாரத்தை மாற்றக் கூடியதாக அரச குடியேற்றத் திட்டங்களை நடத்துவது நியாயமாகாது.

இப்போதைய பங்களாதேஷ், கிழக்கு பாகிஸ்தானாக இருந்தபோது வளர்ச்சியடையாதிருந்தது.

அது போன்று தான் வடக்கு - கிழக்கு உள்ளது.

### பாரம்பரிய தாயக பேச்சு எப்போ வந்தது?

தேர்தல் இலாபங்களுக்காக அரசியல்வாதிகளின் தலையீடு ஆரம்பித்த பின்னர் தான் பாரம்பரியத் தாயகம் என்ற பேச்சே எழுந்தது.

காணி விஷயத்தில் தமிழருக்கு செய்யப்பட்ட அநியாயத்துக்கு உதாரணம் ஒன்றைக் காட்ட விரும்புகின்றேன்.

24-12-1984 அதிகாலை விசேட பொலீஸ் கொமாண்டோ படை வெலிஓயாவுக்குள் புகுந்தது. அங்கு வாழ்ந்து வந்த 5 ஆயிரத்துக்கு அதிகமான தமிழ்க் குடும்பங்களை கொமாண்டோக்கள் வெளியேற்றினர். அதன் பின்னர் தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். இச் சிங்களவர்களில் உண்மையான விவசாயிகள் கொஞ்சம் தான் எஞ்சியோர் பயிற்றப் பட்ட எல்லைக்காவல் படையினர்.

அமெரிக்கப் பழங்குடியினருக்கு, அமெரிக்கர்கள் ஆரம்பத்தில் செய்த அநியாயத்தின் சாயல் இதில்தெரிகிறது.

பழங்குடியினரை அமெரிக்கர்கள் அவர்களின் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றி வேறு இடங்களில் அப்போது குடியமர்த்தினர்.

இன்னொரு முக்கிய பிரச்சினை — இருமாகாண இணைப்பு ஆகும். 1948க்கு முன்னர் இந்த இணைப்புக் கோரிக்கை எழுப்பப்படவில்லை.

அரசின் சிங்களக் குடியேற்றக் கொள்கை காரணமாகத்தான் இந்த இணைப்புப் பிரச்சினை எழுந்தது. அதன் பின்னரே இருமாகாணங்களையும் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை முக்கியமானதாக முன்வைக்கப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி ஸ்ரீநிவாசன்

உரும்பராயைச் சேர்ந்த திருமதி மனோன்மணி ஸ்ரீநிவாசன் 09-10-94இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசையா ஸ்ரீநிவாசன் (இளைப்பாறிய Assistant Supdt. of Investigation, தபால் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற அரியரத்தினம் ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், ஆனைப்பந்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசையா - பாக்கியலக்ஷ்மி ஆகியோரின் மருமகளும், வாசுகியின் (முன்னைநாள் பிரதம பொறியியலாளர், வரையறுக்கப்பட்ட லங்கா சிமெந்து நிறுவனம், தற்பொழுது லண்டன்) பாசமிகு தாயாரும், வைத்திய கலாநிதி செல்லப்பா மகேஸ்வரன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13-10-94 கொழும்பில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. தற்பரநாதன்
(சகோதரன்)

இல: 256, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(33310)

## திருமதி இராமநாதன் கமலாதேவி

திருமதி இராமநாதன் கமலாதேவி 11-10-1994 அன்று அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் இராமநாதன் (இரத்தினம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, திருமதி சிதம்பரப்பிள்ளை செல்லம்மாவின் அன்பு மகளும், கமல்ராஜ், இரத்தினராஜ், தீபராஜ், சந்திரிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சிவஞானம் லிங்கேஸ்வரி, செல்வி வேலுப்பிள்ளை புவனேஸ்வரி, திரு. சி. நாகேஸ்வரன் (தே. வீ. அ. அ. சபை, யாழ்ப்பாணம்), திரு. இ. சிறீஸ்கந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மயிலு, தெய்வானை ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13 - 10 - 1994) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ம. இராமநாதன் (இரத்தினம்)
(கணவர்)

M. S. லேன்,
பிரபாகரன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
[33304]

## திருமதி இலட்சுமிப்பிள்ளை பசுபதிப்பிள்ளை
### வேலணை மேற்கு

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 16, பலாலி வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த, திருமதி இலட்சுமிப்பிள்ளை பசுபதிப்பிள்ளை 10-10-94 திங்கட்கிழமை கொழும்பில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கா. பசுபதிப்பிள்ளையின் அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (கணக்கர் வேலணை மேற்கு), பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், மனோன்மணி, மாணிக்கம், குரும்பசிட்டி இரத்தினம், ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியலெட்சுமி, காலஞ்சென்ற சோமசுந்தரம், இராசலட்சுமி, சிங்கராசா, காலஞ்சென்ற சொர்ணலட்சுமி' நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கார்த்திகேசு (மு. கு. கடை, யாழ்ப்பாணம்), விமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, கிருஷ்ணகோபால் ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன், கிருசாந்தி, பிரேமலதா, கௌரிசங்கர், சாலினி, சரிதா, சர்மிளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-10-94) வியாழக்கிழமை இல. 16, பலாலி வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு பிற்பகல் இரண்டு மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ப. கார்த்திகேசு (மகன்)
து. கிருஷ்ணகோபால் (மருமகன்)

16, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(33316)

## ஏகாம்பரநாதேஸ்வரக்குருக்கள் சோமசுந்தர ஐயர்
(இளைப்பாறிய ஆசிரியர்)
### ஐயா வாத்தியார் - சித்தன்கேணி

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஏகாம்பரநாதேஸ்வரக்குருக்கள் சோமசுந்தர ஐயர் (இளைப்பாறிய ஆசிரியர்) நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் சரஸ்வதி அம்மாவின் அன்புக் கணவரும், சுப்பிரமணிய சர்மா, காலஞ்சென்ற ஏகாம்பரநாத சர்மா, கமலேஸ்வரி, கௌரிபாலா, பாலகிருஷ்ண சர்மா, புவனேஸ்வரி, இலட்சுமி நாராயணசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞா. சபாரட்ண சர்மாவின் (சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வர ஆலயம்), சகோதரரும், சி. பாலஷண்முகக் குருக்கள் (சீரணி நாகம்மாள் தேவஸ்தானம்), ப. மனோகரக் குருக்கள் (வல்லை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்), சு. சபேச சர்மா (ஆசிரியர், பிரான்ஸ்), திரிபுரசுந்தரி, தாட்ஷாஜினி, சிவாஜினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. வி. பிள்ளைகள்

சித்தன்கேணி.
(33318)

---

★ வடபகுதியில்

# தேர்தலை நடத்த பிரபா அனுமதித்தால் 90 சதவீத யாழ். வாக்குகள் எமக்கே

## சிறிமா நம்பிக்கை

கொழும்பு, ஒக். 13

''வடமாகாணத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனுமதிப்பார் என நான் நினைக்கிறேன். அவ்வாறு அவர் அனுமதித்தால் பாழ்ப்பாணத்தில் 90 சதவீத வாக்குகள் எங்களுக்கே கிடைக்கும்''.

—இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அநுராதபுரத்தில் நடைபெற்ற பொ.ஐ.மு.வின் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

1952இல் ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஹெக்டர் கொப்பேகடுவ 8 தொகுதிகளில் வென்றார். 1988இல் அங்கு ஆறு தொகுதிகளில் நான் வென்றேன்.

இப்போது யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடந்தால் 90 வீத வாக்குகள் எமக்குக் கிடைக்கும். அங்கு தேர்தல் நடத்த பிரபாகரன் அனுமதிப்பார் என நான் நம்புகிறேன்.

வடக்கு — கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சந்திரிகா வெற்றியீட்டுவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் நிச்சயம் வெற்றியீட்டப் போவதாக காமினி திஸநாயக்கா கூறுகிறார். ஐ.தே.க அரசாங்கங்களில் அவர் அமைச்சராகப் பணிபுரிந்த விதம் எல்லோருக்கும் தெரிந்ததே. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக அரசியல் குற்றப்பிரேரணையைக் கொண்டு வந்தபோது காமினி திஸநாயக்கா நடந்து கொண்ட விதமும் தெரிந்ததே.

காமினி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கப்போவதில்லை.

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் தேவை. ஜனாதிபதித் தேர்தலில் நாம் வென்றால் அரசமைப்புச் சட்டத்தை மாற்ற அதனைப் பயன்படுத்தலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை கள்ள வாக்குப்போட நாம் அனுமதிக்கமாட்டோம்.

இங்கு கூடியிருக்கும் மக்களைப் பார்த்தால், கூட்டம் நடத்தத் தேவையில்லை என்பது தெரிகிறது. மக்கள் ஏற்கனவே தீர்மானம் எடுத்து விட்டார்கள். எமது வெற்றி நிச்சயம்.— இவ்வாறு அவர் மலும் கூறினார். (உ-3)

## விபத்தில் கைதடி வாசி பலி

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் புங்கங்குளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கைதடியைச் சேர்ந்த சின்னையா வீரசிங்கம் (62வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய போது அவர் அங்கு மரணமானார்.

இதேவேளை விபத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆவரங்காலில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் வளலாயில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசிக்கும் இராமசாமி இராசமணி (72வயது), — உடுப்பிட்டியில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த ரி. அப்புத்துரை (60வயது) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். (ஒ-15)

## அமைச்சர் வீரவன்னிக்கு நீதிமன்று பிணை அனுமதி

கொழும்பு ஒக். 13

கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்று 5 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று வியலுவ என்னுமிடத்தில் ஐ. தே. க. ஆதரவாளரான சூட்டின் விக்கிரமரத்னா என்பவரை தாக்கிக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பதுளை நீதிவானால் இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (உ-6)

## 'மாஹோ' புறப்பட்ட பின்பே 'கோமாரி' கப்பல் வரும்
### ஒன்றாக இங்குநிற்க அனுமதியில்லை

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் மற்றும் 10 ஆயிரம் பக்கெட் சிமெந்து ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படும் 'மாஹோ' கப்பல், வடக்கு நோக்கி புறப்படுவது தற்போது தாமதமாவதாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் தற்சமயம் பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல் அங்கிருந்து புறப்பட்ட பின்னரே 'மாஹோ' கப்பல் வடக்கு நோக்கிப் புறப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

'கோமாரி' கப்பல் பொருள்கள் இறக்கி முடிந்து பெரும்பாலும் சனிக்கிழமையே இங்கு இருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை —

பருத்தித்துறையில் ஒரே நேரத்தில் இரு கப்பல்கள் தரித்து நிற்பதை கடற்படையினர் விரும்பவில்லை என்றும் —

அதனாலேயே இந்த புதிய நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாகவும் —

மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-3)

## அனுரா ஐ.தே.கவை விட்டு விலகாராம்!

கொழும்பு, ஒக் 13

ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் எம். பியான அனுரா பண்டாரநாயக்கா ஐ. தே. கவை விட்டு விலக மாட்டார்.

இத்தகவலை அவரே கடந்த வாரம் ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான காமினி திஸநாயக்காவிடம் நேரில் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலின் போது காமினி முழுபக்கபலமாக அனுரா செயற்படுவார் என்று அனுராவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அனுராவை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சேர்த்துக் கொள்வதற்கு அவரது தாயான திருமதி. சிறிமாவே பண்டர நாயக்கா உட்பட பலரால் கடந்த சில வாரங்களாக அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும்—

தமது உதவியாளர்களுடன் இதுகுறித்து விரிவாக ஆலோசனை நடத்திய அனுரா பண்டர நாயக்கா— குடும்பத்தினரின் நெருக்குதலுக்கு மத்தியிலும் — தற்போதைய தமது பதவியில் மாற்றமில்லாது இருக்க முடிவு செய்திருப்பதாகவும் அனுராவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## 40 தமிழர்கள் விடுவிப்பு

கொழும்பு, ஒக். 13

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த 40 தமிழ்க் கைதிகள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர் என்று நீதி அமைச்சு அறிவித்தது. [உ-6]

### இனப்பிரச்சினை..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் நல்லுறவை கட்டியெழுப்புவதில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும்சமாதானமுயற்சியில் தலையிடாது. அதே நேரத்தில் வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு இந்தியா தயாராக உள்ளது.

இலங்கையில் சமாதானத்தை எவ்வாறு, எவ்வளவு விரைவில், எப்படியான நடவடிக்கைகளால் அடைவது போன்ற விஷயங்களில் இந்தியா தலையிடமாட்டாது.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாது —.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். ஒ-எ-6)

### ஓய்வூதியரின்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவுப்படியாக மாதாமாதம் 260 ரூபாவை ஓய்வூதியக்காரர்களுக்கு வழங்குவதாக முந்தைய அரசு அறிவித்திருந்தது. தற்போதைய அரசு இந்த அலவன்ஸை 1988 முதல் கொடுக்கப்போவதாக உறுதியளித்தது. குறிப்பிடத்தக்கது

இதன்படி—

ஒவ்வொரு ஓய்வூதியரும் மாதாந்தம் 260 ரூபா வீதம் 1988 முதல் நிலுவையைப் பெறுவர். 1988 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற ஒருவருக்கு சுமார் 19 ஆயிரம் ரூபாவரை நிலுவைப் பணம் கிடைக்கும் (உ-எ)

### இன்றும்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இன்று காலை முதல் மதியம் வரை முதல் சுற்றுப் பேச்சு இடம்பெறும். பின்னர் மதிய போசனத்திற்குப் பின்னர் பிற்பகலில் இரண்டாவது சுற்றுப் பேச்சு நடைபெறும்.

பேச்சுகள் நாளை காலை இரு சுற்றுகளாகவும் —

நாளை பிற்பகல் இரண்டு சுற்றுகளாகவும் இடம்பெறும்.

ஒவ்வொரு சுற்றுப் பேச்சுகளின் போதும் ஒவ்வொரு விடயம் குறித்து ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை பேச்சுக்கள் முடிவடைந்ததும் அரசதூதுக்குழுவினர் மாலையிலேயே ஹெலி மூலம் பலாலி சென்று அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பு செல்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-எ)

## அரச பிரதிநிதிகள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளராவார். இலங்கை வங்கியின் தலைவராக இருக்கும் இவர் பிரபல கணக்காளர். றோட்டறி உறுப்பினரும் ஆவார்.

### ஏ. நவீன் குணரத்தின

கொழும்பில் உள்ள பிரபல கட்டடக்கலை நிறுவனத்தின் தலைவரான இவர் யாழ். பல்கலைக்கழகம், கிளிநொச்சி விவசாயபீடம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட பல கட்டடங்களுக்கான கட்டட வரைபடங்களை ஆக்கிக் கொடுத்தவர்களில் ஒருவர்

பிரபல [illegible] குணரத்தினவின் மக [illegible]

---

போரினால் அழிக்கப்பட்ட

# 1,000இந்து ஆலயங்களையும் அரசு புனரமைக்கவேண்டும்

## இந்துப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13

'போரினால் அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்து வழிபாட்டுத் தலங்களை உடனடியாகப் புனர்நிர்மாணம் செய்து தெய்வங்களுக்கான பூசைகளும், உற்சவங்களும் ஒழுங்காக நடைபெறுவதற்கு அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.'

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

இந்துக்களின் பிரதானமான வரலாற்றுப் பெருமை மிக்க மன்னார் திருக்கேதீஸ்வரம், உகந்தை முருகன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம் ஆகிய திருத்தலங்களில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை உடனடியாக விலக்கவும், இந்துக்கள் அங்கு சென்று சுதந்திரமாக வழிபடவும் ஏற்ற ஒழுங்குகளை உடனடியாகச் செய்யவேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காமினியின்கீழ்பணிபுரிந்தவன் நான்

# எனக்காக எவரும் கவலைப்படாதீர்கள்!

## மக்களிடம் ரணில் கோரிக்கை

ஐ. தே. கவின் ஜனாதிபதி வேட்பாளராக நான் வரவில்லை என்று சிலர் கவலை கொள்கின்றனர். யாரும் எனக்காகக் கவலை கொள்ளத் தேவையில்லை. நானே அதைப்பற்றி கவலைப்படாமல் எமது கட்சியின் வேட்பாளரான காமினி திஸநாயக்காவுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வந்திருக்கும் போது இவர்களுக்கு ஏன் இந்தக் கவலை என்று எனக்குத் தெரியவில்லை.

—இவ்வாறு கூறினார் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. கடந்த வெள்ளியன்று கொழும்பு மருதானையில் நடைபெற்ற ஐ. தே. கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நான் காமினி திஸநாயக்காவின் கீழ் பிரதி அமைச்சராகவும் கைத்தொழில் அமைச்சராகவும் இருந்திருக்கிறேன். எனக்கு இப்போது வேண்டியதெல்லாம் ஐ. தே. கவை வலுப்பெறச் செய்வதேயாகும்.—என்றார்.


யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி

'நாதநர்த்தனம் நாட்டிய நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது

16 - 10 - 94 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த 'நாதநர்த்தனம்' நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணங்களினால் 23 - 10 - 94 ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதிபர்
யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

(சி / 9324)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளியம்மை நாகலிங்கம்

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 74/2 அரசடி வீதி யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவரும், நெடுங்கேணி லிங்கம் ஸ்ரோஸ் உரிமையாளராகிய காலஞ்சென்ற K. M. நகாலிங்கத்தின் அன்பு மனைவி வள்ளியம்மை நேற்று சிவபதம் அடைந்தார்.

இவர் தர்மலிங்கம், சுந்தரலிங்கம், மகாலிங்கம், அமிர்தலிங்கம் (லண்டன்), பாக்கியலட்சுமி, ரதிதேவி, சரோசினிதேவி (கனடா), பத்துமசோதி (கொழும்பு), தனலட்சுமி, (கொழும்பு), கமலாம்பிகை (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராசா, [நெடுங்கேணி], காலஞ்சென்ற சபாநாயகம், பரமேஸ்வரன் [கனடா], நித்தியானந்தம் [கொழும்பு], சிவராசா [கொழும்பு], சிவபாலன் [அவுஸ்ரேலியா], சுவர்ணம், விசயலட்சுமி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புமாமியும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. மகாலிங்கம்
[மகன்[
[33317]

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் (வெளி 14 : 13)

கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

## அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை

இளவாலையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை [பண்டிதர்] 11 - 10 - 94 அன்று கேரதிவு வீதி, நாவற்குழி கிழக்கு திரு. து. தியாகராஜாவின் தாயாரின் இல்லத்தில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். இளவாலை புனித கென்றிஅரசர் கல்லூரியின் முன்னைநாள் ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர் மேரிலூர்துவின் அன்புக் கணவரும், திரு. சற்குணம் [இந்தியா], திரு. குலசிங்கம் [மீசாலை], திருமதி பத்மிமா இராசதுரை [கொழும்பு], திருமதி நீற்றா பிரிந்தராஜா [நோர்வே], திருமதி மனோ ரவிக்குமார் [உடுவில்], திருமதி றெஜினா ஞானப்பிரகாசம் [நோர்வே], செல்வி அன்ரனீற்றா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் திரு. யோசப்பின் அன்பு சகோதரரும், அருட்திரு யோசவ் A. சமரக்கோன் [அ. ம. இ. இந்தியா] அவர்களின் மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபை விசுவாசிகள் யாவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. மேரிலூர்து
[மனைவி]

உடையார் ஒழுங்கை,
இளவாலை.
[33819]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இல் அச்சிட்டு 13 - 10 - 1994 இல் வெளியிடப்பெற்றது.